**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காட்பாடி,</u>**

<u>முன்னிலை:</u> திரு. S.K.P. திலிப்பாபு M.A.M.L.,

நீதித்துறை நடுவர்,

காட்பாடி

<u>2026 வது வருடம் மார்ச் திங்கள் 12 ஆம் நாள் வியாழக்கிழமை</u>

**<u>குற்றப்பல்வகை மனு எண்.300/2026</u>**

சூர்யா, த/பெ ராஜு

.... மனுதாரர்

//எதிராக//

காவல் உதவி ஆய்வாளர்,
பிரம்மபுரம் காவல் நிலையம்,
குற்ற எண் 11/2026 .... எதிர்மனுதாரர்

இம்மனுவானது 12.03.2026 இன்று என் முன்பாக விசாரணைக்கு வந்து மனுதாரர் குற்றஞ்சாட்டப்பட்ட நபரின் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.மகேந்திரவர்மன் அவர்கள் முன்னிலையாகியும், அரசுத்தரப்பில் குற்றவியல் வழக்கறிஞர் நிலை-2 அவர்களின் ஆட்சேபனை, இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், அரசு தரப்பில் சமர்ப்பிக்கப்பட்ட எழுத்துமூலமான ஆட்சேபனையை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**<u>உத்தரவு</u>**

1. மனுதாரர்/குற்றஞ்சாட்டப்பட்ட நபர் பிணை கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் மீது பிரம்மபுரம் காவல் நிலையகுற்ற எண் 11/2026 இதச பிரிவுகள் U/s 331(3), 305(a) BNS-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கு சம்பவத்திற்கும், மனுதாரர்ருக்கும் எந்தவித தொடர்பும் இல்லையென்றும், மனுதாரர் மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் பிணையில் விடும்பட்சத்தில், அவர் நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைகளை ஏற்று தவறாது நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு முன்னிலையாவார் என்றும் பிணை மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2.அரசுத்தரப்பில் எதிரி பிணையில் விட்டால் பிரம்மபுரம் காவல் நிலையகுற்ற எண் 11/2026 இதச பிரிவுகள் U/s 331(3), 305(a) BNS-ன் கீழ் வழக்கின் கண்ட எதிரி சூர்யா, த/பெ ராஜு என்பவர் ஜாமீன் கோரி மனு சமர்பித்துள்ளார் எதிரியை ஜாமீனில் விடுவித்தால் மீண்டும் இது குற்ற சம்பவங்களில் ஈடுபடுவார் என்பதாலும் வழக்கின் சாட்சிகளை கலைக்க நேரிடும் என்பதாலும், எதிரிக்கு ஜாமீன் வழங்க கடுமையான

ஆட்சபேணை செய்கின்றேன்.

3.இருபுறமும் கேட்கப்பட்டன, வழக்கு ஆவணங்கள் அனைத்தும் மிகுந்த கவனத்துடன் பரிசீலனை செய்யப்பட்டு கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டன.

4.குற்றஞ்சாட்டப்பட்ட நபர் 07.02.2026 ஆம் தேதியிலிருந்து நீதிமன்ற காவலில் இருந்து வருவதை கருத்தில் கொண்டும், குற்றஞ்சாட்டிற்கான தண்டனை மற்றும் அதன் தன்மையை கருத்தில் கொண்டும், வழக்கு கோப்பினை பரிசீலனை செய்து பார்த்ததில், குற்றஞ்சாட்டப்பட்ட நபர் வழக்கு விசாரணையின்போது நீதிமன்றத்தில் முன்னிலையாவதை உறுதி செய்து கொள்ள தகுந்த பிணையாளர்களை பெற்று, உரிய நிபந்தனைகளுடன் குற்றஞ்சாட்டப்பட்ட நபரை பிணையில் விடுவிக்கலாம் என தீர்வு கண்டு, இப்பிணை மனுவானது இந்நீதிமன்றத்தால் கீழ்காணும் நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்படுகிறது.

<u>நிபந்தனைகள்:</u>

1 குற்றஞ்சாட்டப்பட்ட நபர் ரூ.10,000/-(ரூபாய் பத்தாயிரம்) பிணை தொகைக்கு பிணைமுறி ஆவணம் எழுதி கொடுக்கவேண்டுமென்றும், அதே தொகைக்கு இரு பிணையாளர்களை தனித்தனியே 6 மாத காலத்திற்குள் எடுக்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய உரிய முகவரி ஆவணங்களுடன் பார்ம் எண்.46-யை சமர்ப்பிக்கவேண்டுமென்றும்,

2 குற்றஞ்சாட்டப்பட்ட நபர் தினமும் காலை 10.00 மணிக்கு பிரம்மபுரம் காவல் நிலையத்தில் முன்னிலையாகி 30 நாட்கள் வரும் வரை கையொப்பம் இடவேண்டுமென்றும்,

3 குற்றஞ்சாட்டப்பட்ட நபர் பிணையில் இருக்கும் காலத்தில் சாட்சிகளை கலைக்க கூடாது என்றும், தலைமறைவாகி விடக்கூடாது என்றும், வழக்கின் விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 12.03.2026 ஆம் தேதி பகரப்பட்டது.

S K P DILIP BABU

Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.